RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF TAMIL

Asian Research Association

DOI: 10.54392/ijot2638

# R. Vaiyapuri's Grammatical Hermeneutics: A Study of Jnanamalaiyavay in Vinavenpa

**V.S. Sharan Karthick** [a, *]

[a] Department of Tamil, Bharathiar University, Coimbatore-641046, India

*Corresponding author Email: vsskselvakumar126@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijot2638

Received: 08-07-2026; Revised: 16-08-2026; Accepted: 22-08-2026; Published: 30-08-2026

**Abstract:** Commentarial writings on Saiva Siddhanta scriptures occupy a distinctive position within the Tamil exegetical tradition. Among the significant contributors to the Saiva Siddhanta commentary tradition of the twenty-first century, R. Vaiyapuri is notable for an interpretive method that gives particular importance to grammatical principles in determining textual meaning. His commentarial practice employs grammatical rules as primary evidence for establishing meaning, citing them directly, through textual references, and in footnotes, and subsequently relating the grammatical interpretation to Saiva Siddhanta philosophical concepts. This grammar-based interpretive approach is evident across several of his commentaries. The present study focuses specifically on his interpretation of the expression *Nanamalaiyavay* occurring in *Vinavenpa* by Umapati Civam. The study examines the grammatical structure of the compound *Nanamalai* and the semantic function of the formative expression *Avay*. Particular attention is given to the grammatical concepts of panputtokai (qualitative compound), natural and artificial derivation, and the relationship between derivational formation and causation. Through this analysis, *Nanamalai* is interpreted metaphorically as signifying the stability, density, and accumulated fullness of knowledge. The study demonstrates that Vaiyapuri's interpretation does not treat grammar merely as a linguistic mechanism but employs grammatical analysis as a means of establishing and substantiating philosophical meaning. His method reveals how grammatical structure, semantic interpretation, and Saiva Siddhanta philosophy interact within the Tamil commentarial tradition. The study therefore highlights the fundamental role of grammatical knowledge in Saiva Siddhanta exegesis and demonstrates the significance of grammar as an interpretive tool for uncovering and validating philosophical meaning in classical and theological texts.

**Keywords:** Nanamalai, Vinavenpa, Nanamalaiyavay, Saiva Siddhanta philosophy, Tamil Hermeneutics

# தொகை இலக்கணமும் ஆக்கச்சொல் பொருண்மையும்: ர. வையாபுரியாரின் உரைநுட்பம்

**வெ.செ. சரண் கார்த்திக்** [அ *]

[அ] தமிழ்த்துறை, பாரதியார் பல்கலைக்கழகம், கோவை-641046, இந்தியா

## முன்னுரை

தமிழ் உரைமரபில் சைவசித்தாந்தச் சாத்திர உரைகள் பெற்றுள்ள இடம் தனித்துவமானது. அவ்வகையில், இருபத்தொன்றாம் நூற்றாண்டின் சைவசித்தாந்த உரைமரபில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கிய ர. வையாபுரி அவர்களின் உரைநெறி தனித்துவமான இடத்தைப் பெறுகிறது. பொருளைத் தீர்மானிக்கும் முதன்மை ஆதாரமாக இலக்கணவிதிகளைக் கையாள்வது அவரது உரைநெறியின் சிறப்பாகும். இலக்கண விதிகளை நேரடியாகவும், மேற்கோளாகவும், அடிக்குறிப்பாகவும் சுட்டி, அவற்றின் அடிப்படையில் இலக்கியப் பொருளைத் தெளிவுபடுத்துகிறார். மேலும், நிறுவப்பட்ட பொருளைச் சைவசித்தாந்தக் கருத்துடன் பொருத்தி உறுதிப்படுத்துகிறார். இத்தகைய இலக்கண அடிப்படையிலான அணுகுமுறை அவரது பல்வேறு உரைகளிலும் காணப்படுகிறது.

அவ்வுரைநெறியின் ஒரு குறிப்பிட்ட வெளிப்பாடாக, உமாபதிசிவம் இயற்றிய *வினாவெண்பா*வில் இடம்பெறும் "ஞானமலையாவாய்" என்னும் தொடரை மட்டும் இவ்வாய்வு மையமாகக் கொண்டுள்ளது. 'ஞானமலை' என்னும் தொகைச்சொல்லின் இலக்கண அமைப்பும், 'ஆவாய்' என்னும் ஆக்கச்சொல்லின் பொருண்மையும் ஆராயப்படுகின்றன. பண்புத்தொகை, இயற்கை-செயற்கை ஆக்கம், ஆக்கத்திற்கும் காரணத்திற்கும் உள்ள தொடர்பு ஆகிய இலக்கணக் கருத்துகள் இவ்விளக்கத்திற்கு அடிப்படையாக அமைகின்றன. 'ஞானமலை' என்பது ஞானத்தின் நிலைத்தன்மையையும் திரட்சியையும் உணர்த்தும் உருவகமாக விளக்கப்படுகிறது. இதன்வழி, சைவசித்தாந்தக் கருத்தை உறுதிப்படுத்தும் வையாபுரியாரின் இலக்கண உரைநுட்பத்தை இவ்வாய்வு வெளிப்படுத்துகிறது. அத்துடன், சைவசித்தாந்த உரை மரபில் இலக்கணம் ஆற்றும் பணி எவ்வளவு அடிப்படையானது என்பதை வெளிக்கொணரவும் இக்கட்டுரை முயல்கிறது.

## தொகை நிலை

தமிழ் இலக்கணத்தில் தொகைநிலை என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சொற்கள் இடையில் வேற்றுமை உருபுகளோ, வினை, பண்பு முதலியவற்றின் உருபுகளோ மறைந்து நின்று ஒரு சொல் போல் பொருள் தருவதாகும்.

அவ்வகையில் 'ஞானமலை' எனும் தொகைச்சொல் உமாபதிசிவம் இயற்றிய வினாவெண்பாவின் மூன்றாம் பாடலில் இடம்பெற்றுள்ளது. இதனை பண்புத்தொகையாகவோ உவமைத்தொகையாகவோ வேற்றுமைத்தொகையகாவோ பொருள்கொள்வதற்கு இடமுண்டு.

பண்புத்தொகை என்பது நிறம், வடிவம், அளவு, சுவை ஆகிய பண்புகளை உணர்த்தும் பெயருக்கும், அது சார்ந்து வரும் பெயர்ச்சொல்லுக்கும் இடையில் 'ஆகிய', 'ஆன' என்னும் பண்பு உருபுகள் மறைந்து வருவது பண்புத்தொகை. பண்புத்தொகையில், முதல் சொல் பண்பை (குணத்தை) உணர்த்தும்; இரண்டாவது சொல் அப்பண்பை உடையபொருளை (குணியை) உணர்த்தும். எனவே குணத்தை உடையது குணியாகும். பண்புத்தொகையாகக் கொண்டால், 'ஞானமாகிய மலை' எனவிரிந்து, ஞானத் தன்மை வாய்ந்த மலையைக் குறிக்கும். உவமைத்தொகையாகக் கொண்டால், 'மலை போன்ற ஞானம்' எனவிரிந்து, மலையளவு பெரிதாய், உயர்ந்ததாய் விளங்கும் ஞானத்தைக் குறிக்கும். வேற்றுமைத்தொகையாகக் கொண்டால், 'ஞானத்தின் மலை' எனவிரிந்து, ஆறாம் வேற்றுமை உருபாகிய 'இன்' மறைந்து வந்து, ஞானத்தால் ஆகிய அல்லது ஞானத்தை உடைய மலையைக் குறிக்கும். ஆனால் சைவசித்தாந்தத்திற்கு முரணாகாதவாறு பொருளைத் தேர்வது எப்படி என்பதை வையாபுரி அவர்கள் தனது உரையில் விளக்கியுள்ளார்.

## ஞானமலை எனும் தொகைச்சொல் - பொருள் நுட்பம்

சிவபெருமானை 'மலை' என்று போற்றும் வழக்கத்தை சைவத் திருமுறைகள் காட்டுகின்றன. தமிழ்ச் சைவமரபில் குருவே சிவமெனக் கொள்ளும் வழக்கத்தால் சிவத்திற்கு உருவகமாகும் 'மலை' உமாபதிசிவம் இயற்றிய வினாவெண்பாவில் குருவுக்குப் பயின்று வந்துள்ளது.

"புல்லறிவு நல்லுணர்வதாகா; பொதுஞானம்

அல்லது இலது உளதெனில், அன்னியமாம் - தொல்லை இருள்

ஊனம் அலையாவாறு உயர்மருதைச் சம்பந்தா!

ஞானமலை ஆவாய்! நவில். (Vaiyapuri, 2013).

என்பதில், உமாபதிசிவம் தம் ஆசிரியரை நோக்கி "ஞானமலை ஆவாய்" என்று குறிப்பிடுகிறார். இத்தொடரில் ஆசிரியர் ஞானமலையாக உருவகிக்கப்படுகிறார்.

சைவசித்தாந்தம் ஞானத்தின் திரட்சியே சிவம் என்கிறது. இதனை 'ஞானத்திரளாய் நின்ற பெருமான்' (1:69:03) என்ற திருஞானசம்பந்தரின் திருமுறைத் தொடரை உரையாசிரியர் மேற்கோளாகக் கொண்டு உறுதிப்படுத்துகிறார். எனவே, ஞானம் வேறு சிவம் வேறு அல்ல என்பது கருத்து.

முதலில் 'ஞானமலை' என்னும் தொகைச்சொல்லின் இலக்கண அமைப்பை வையாபுரி அவர்கள் இரு வகையாக விரித்துக் காட்டுகிறார் ஒன்று, 'ஞானமாகிய மலை' என விரித்துப் பண்புத்தொகையாகக் கொள்வது; இதன்படி ஞானமும் மலையும் வேறல்ல, ஞானமே மலை என்னும் ஒற்றுமைப் பொருள் விளங்கும். மற்றொன்று, சொற்களை முன்பின்னாக மாற்றி 'மலைபோன்ற ஞானம்' என விரித்து உவமைத்தொகையாகக் கொள்வது; இதன்படி மலை ஞானத்திற்கு உவமையாக மட்டும் நிற்கும், இரண்டும் வேறு வேறு பொருள்களாகவே இருக்கும். இவ்விரு பொருள்களுள் பண்புத்தொகையாக வரும் ஒற்றுமைப் பொருளே சிறந்ததாக உரையாசிரியரால் கருதப்படுகிறது.

இதனை உறுதிப்படுத்தும் வகையில் "குணம் என்னும் குன்று" என்ற திருக்குறள் தொடருக்குப் பரிமேலழகர் வழங்கும் "குணங்களாகிய குன்று" என்ற உரையைச் சான்றாகக் கொள்கிறார். இச்சான்றின்

மூலம் "ஞானமலை" என்பதனை "ஞானமாகிய மலை" எனக் கொள்வதற்கு இலக்கிய உரைமரபிலும் ஆதாரம் இருப்பதை நிறுவுகிறார். இதே தொகை-நுட்பம், சிவப்பிரகாச சுவாமிகளின் சோணசைலமாலை தொண்ணூற்று ஓராவது பாடலின் "கருணைமலை" உருவகத்திலும் காணப்படுவதை அடிக்குறிப்பில் சுட்டியுள்ளார். இது ஒற்றுமைப் பொருள் தேர்வுக்கு இன்றியமையாத சான்றாகும்.

## ஒற்றுமைப் பொருள்

துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளின் சோணசைலமாலையில்,

"மொழிதரு கருணை மலையெனும் பெயரன்

மொழியொரீஇ வேற்றுமைத் தொகையைத்

தழுவுற நின்று வளர்ந்திடும் …" (Murugesa Mudaliar, 1971).

என்ற இப்பாடலின் தனித்தன்மை என்னவெனில், தொகை இலக்கணம் பற்றிய விளக்கத்தை ஆசிரியர் சிவப்பிரகாச சுவாமிகளே தமது பாடலிலேயே "அன்மொழி ஒரீஇ வேற்றுமைத் தொகையைத் தழுவுற நின்று வளர்ந்திடும்" என்று குறிப்பிட்டுள்ளார். அதாவது, சிவன் மலையாக உருவெடுத்த நிகழ்வை விளக்கும் அதே சொற்றொடரில், அந்நிகழ்வுக்கு ஏற்ப பெயரின் இலக்கண வகையும் மாறுவதை ஆசிரியரே பாடலுக்குள் நிலைநாட்டியிருக்கிறார். கவிதையும் இலக்கண உரையும் ஒரே சொற்றொடரில் இணைந்திருக்கும் அரிய அமைப்பு இது.

முதலாவது, "கருணையாகிய மலையை உடையவர்" என்னும் பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை; இரண்டாவது, "மலை போலும் கருணையை உடையவர்" என்னும் உவமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இவ்விரண்டும் மலைவடிவம் ஆவதன் முந்தைய நிலைக்கே உரியவை. ஆனால் அவர் மலைவடிவம் எடுத்த பின்னர், அதே பெயர் "கருணையையுடைய மலை" என, இரண்டன் உருபும் பயனும் உடன் தொக்கு நிற்கும் வேற்றுமைத்தொகையாக மாறுகிறது.

இரு பாடல்களும் மலை என்ற ஒரே வகை உருவகத்தைக் கையாள்கின்றன ஆனால் அவற்றின் தொகை இலக்கண அமைப்பின் முடிவுகள் வேறுபடுகின்றன. ஒரே சொல்லமைப்பிற்குள் ஒற்றுமைப் பொருளும் வேற்றுமைப் பொருளும் தோன்றும் வாய்ப்பை உரையாசிரியர் நுட்பமாகத் தனது உரையில் பயன்படுத்தியுள்ளார்.

ஆகவே, சிவப்பிரகாச சுவாமிகள் கவிஞராகவும் உரையாசிரியராகவும் ஒரே நேரத்தில் செயல்பட்டு, தமது பாடலின் இலக்கணத்தைப் பாடலுக்குள்ளேயே நிலைநாட்டுகிறார். வையாபுரி அவர்கள் அந்நுட்பத்தை ஏற்றுப் பின்பற்றுகிறார். அத்துடன் தாம் விளக்க முனையும் மூலப்பனுவலின் வேறுபட்ட இயல்பை உணர்ந்து, அதற்கேற்ப வேறு தனி மரபுகளிலிருந்து ஆதாரம் திரட்டி ஒற்றுமைப் பொருளின் பொருத்தப்பட்டை நிறுவுகிறார்.

## ஆவாய் - சொல் அமைப்பும் விளிப் பொருளும்

'ஆவாய்' என்பது 'ஆகு' எனும் வினையடியிலிருந்து பிறந்தது; அதனுடன் எதிர்காலத்தைக் குறிக்கும் 'வ்' என்ற இடைநிலையும், 'ஆய்' என்ற முன்னிலை ஒருமையைக் குறிக்கும் வினைமுற்று விகுதியும் சேர்ந்து அமைந்த வடிவமே இது. இலக்கணப்படி இது முழுமையான முன்னிலை ஒருமை எதிர்கால வினைமுற்றே. ஆயினும், தொடரின் அமைப்பைப் பொருத்தமட்டில், இச்சொல் பயனிலையாக நிற்கவில்லை என்பது புலனாகும். ஏனெனில் இப்பாடலின் ஒரே பயனிலை 'நவில்' எனும் ஏவல் வினைமுற்றே. ஆகவே 'ஆவாய்' என்பது 'உயர்மருதைச் சம்பந்தா' எனும் பெயர்விளிக்கு இணையாக, அதே ஆசிரியரை நோக்கிய இரண்டாம் விளியாக நிற்கிறது. இவ்வமைப்பு

'அன்னையும் அத்தனும் ஆவாய்' (4:112:3)

'வானோர்க்கு என்றும் பொருள் ஆவாய்' (6:99:4)

என்ற அப்பர் தேவார வரிகளில் இடம்பெற்றிருப்பதைக் காணமுடிகிறது. (Gnanasambandan, 2016).

## ஆக்கச்சொல் இலக்கணமும் 'ஆவாய்' பொருளும்

ஒரு பொருள் திருந்துவதும், கெடுவதும், இன்னொரு பொருளாக மாறுவதுமே ஆக்கம் எனப்படும்; ஆக்கம் என்பது ஒருவகைத் திரிபே. ஆக்கச்சொல் பயன்படுத்தப்படும் இடங்களில் பொருளில் நிகழும் மாற்றம் அல்லது திரிபு கவனத்தில் கொள்ளப்படுகிறது. ச. பாலசுந்தரம் அவர்கள் 'செயற்கைப் பொருளை ஆக்கமொடு கூறல்' என்ற தொல்காப்பிய 20ஆம் நூற்பாவுரையில் 'ஆக்கம் என்றது பொருள் பற்றிய சொல்லையாதலின் ஆன, ஆயின, ஆகிய என அதன் திரிபாக வருவனவெல்லாம் கொள்க' (Balasundaram,

2012). என்று விளக்கம் தந்துள்ளார். ‘ஆவாய்’ என்பது ‘ஆகு’ எனும் வினைவேரிலிருந்து பிறந்தது. ‘ஆகு’ எனும் வினைச்சொல் ‘ஆதல், உண்டாதல், மாறுதல்’ எனும் அடிப்படைப் பொருளைக் கொண்டது.

எனவே “ஞானமலை ஆவாய்” என்பதை ‘ஞானமலையாக ஆகுக’ என்று பொருள் கொள்வதற்கு வாய்ப்பு உள்ளது. அவ்வாறு கொண்டால் ஞானம் பின்னர் ஏற்பட்ட ஒன்றாகவும், அதன்பின் ஆசிரியர் மலையாக உருவானதாகவும் பொருள் அமையும். அதனால் இப்பொருளை உரையாசிரியர் மறுக்கிறார். எனவே ஆக்கச் சொல்லின் இவ்விலக்கணப் பொதுநிலையை மட்டும் வைத்துப் பொருள் கொள்வது பொருத்தமானதாக அமையாது.

‘ஆக்கம் செயற்கையால் விளைந்த வேறுபாடாகிய திரிபினை உணர்த்தி வரவில்லை’ (Vaiyapuri, 2013). என்று கூறுவதன் மூலம், ‘ஆவாய்’ என்பதில் செயற்கை ஆக்கத்தால் ஏற்பட்ட மாற்றம் குறிக்கப்படவில்லை என்பதை இலக்கண அடிப்படையில் நிறுவுகிறார்.

தொல்கப்பியத்தில் இவ்வேறுபாட்டை தெளிவுபடுத்துவதற்காக சேனாவரையர் இரண்டு நிலைகளை எடுத்துக்காட்டுகளாக முன்வைக்கிறார்.

‘நிலம் வலிதாயிற்று என இயற்கைப்பொருள் ஆக்கம் பெற்று வருமால் எனின் கல்லும் இட்டிகையும் பெய்து குற்றுச் செய்யப் பட்ட நிலத்தை வலிதாயிற் றெனின், அது செயற்கைப் பொருளே யாம். நீர் நிலமும் சேற்று நிலமும் முன் மிதித்துச் சென்று வன்னிலம் மிதித்தான், நிலம் வலிதாயிற்று என்றவழி மெலிதாயது வலிதாய் வேறுபட்டதென ஆக்கம் வேறுபாடு குறித்து நிற்றலின் இயற்கைப் பொருள் ஆக்கமொடு வந்ததன்றாம்’ (Senavaraiyanar, 2016).

முதலாவது நிலையில், ஒருவனுடைய வீட்டின் முன்பகுதியில் தரை நீர் மிகுதியாகத் தேங்கி, சேறும் சகதியுமாகக் காணப்படுகிறது. அவன் கல் சிமிண்டுக் கலவை போன்றவற்றைப் பயன்படுத்தித் தரையைச் செப்பம் செய்து கெட்டிப்படுத்துகிறான். இங்கு தரை அதன் முன்னைய நிலையிலிருந்து மாறி, செயற்கையாக வலிமை பெற்ற நிலையை அடைகிறது. எனவே, ‘நிலம் வலிதாயிற்று’ என்று ஆக்கச்சொல் கொண்டு கூறுவது பொருத்தமாகிறது. இந்நிலையில், நிலத்தில் உண்மையான மாற்றம் நிகழ்ந்துள்ளது. ஆகவே, இங்கு ஆக்கம் என்பது பொருளின் நிலையில் ஏற்பட்ட உண்மையான திரிபு ஆகும்.

இரண்டாவது நிலையில், ஒருவன் வழிநெடுகிலும் நீரும் சேறுமாக உள்ள மென் நிலத்தில் நடந்து வந்து, பின்னர் இயல்பாகவே வன்மையான நிலப்பகுதியை அடைகிறான். அந்த வன் நிலத்தை மிதித்தவுடன் ‘நிலம் வலிதாயிற்று’ என்று கூறுகிறான். ஆனால் இங்கு அவன் மிதித்ததனால் அந்த நிலம் புதிதாக வலிமை பெறவில்லை. அது முன்பே வன்மையை இயல்பாக உடையதாகவே இருந்தது. எனவே, இங்கு நிலத்தில் திருத்தமோ, மாற்றமோ, செயற்கையான ஆக்கமோ நிகழவில்லை. மாறாக, முன்பு மிதித்த மென் நிலத்துடன் ஒப்பிடும்போது இப்போது மிதிக்கும் நிலம் வலிமையானதாக இருப்பதால், அதன் வேறுபாட்டை உணர்த்தும் பொருட்டே ‘வலிதாயிற்று’ என்று ஆக்கச்சொல் வழங்கப்படுகிறது.

இதனால் இவ்விரு எடுத்துக்காட்டுகளிலும் ஆக்கத்தின் தன்மை ஒன்றல்ல என்பது தெளிவாகிறது. முதலாவது எடுத்துக்காட்டில் உண்மையான செயற்கை மாற்றம் நிகழ்ந்துள்ளது; இரண்டாவது எடுத்துக்காட்டில் மாற்றம் எதுவும் நிகழாமல், ஏற்கெனவே இருந்த இயல்பான தன்மையே வெளிப்படுத்தப்படுகிறது. இரண்டாவது எடுத்துக்காட்டில் கூறப்பட்டதைப் போல, ஞானத்தை இயல்பாகவே உடையதாக இருப்பதை வெளிப்படுத்துவதற்காகவே ‘ஆவாய்’ என்னும் ஆக்கச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆக்கச் சொல் பற்றிய இவ்விலக்கண விளக்கத்தை கருத்தில் கொண்ட உரையாசிரியர்,

‘ஆவாய் என்பதில் ஆக்கம் செயற்கையால் விளைந்த வேறுபாடாகிய திரிபினை உணர்த்தி வரவில்லை; ஞானமேயாக - ஞானத்தை இயல்பாகவே உடையதாக இருப்பது என்னும் பொருளில் வந்தது’ (Vaiyapuri, 2013).

என சுருங்கச்சொல்லி விளங்கவைத்தமை குறிப்பிடத்தக்கது. சேனாவரையரின் இவ்விரு நிலைகளையும் அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது, ‘ஆக்கம்’ என்பது எல்லா இடங்களிலும் பொருளில் நிகழும் செயற்கையான மாற்றத்தையே குறிக்கும் எனக் கொள்ள முடியாது என்பது புலப்படுகிறது.

## இயற்கைப் பொருள் மற்றும் செயற்கைப் பொருள்

வையாபுரி அவர்களின் ‘ஆவாய்’ விளக்கம், இயற்கைப் பொருள் மற்றும் செயற்கைப் பொருள் ஆகியவற்றின் இலக்கண வேறுபாட்டை அடிப்படையாகக் கொண்டு அமைந்த நுண்ணிய பொருளாய்வாக அமைந்துள்ளது. இவ்விடத்தில் காணப்பட்ட உரைநுட்பம்

“இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்” (Senavaraiyanar, 2016)

என்ற தொல்காப்பிய நூற்பாவால் உறுதியாகிறது. இயற்கைப் பொருளின் தன்மை என்பது அப்பொருளுக்குப் பின்னர் தோன்றும் ஆக்கம் அன்று; அப்பொருளோடு உடனிகழும் இயல்பு என்பது நூற்பாவின் கருத்தாகும். ஞானம் ஆசிரியருக்கு பின்னர் ஏற்பட்ட மாற்றமன்று; இயல்பாகவே உடனிகழும்

தன்மை என்பதால் இத்தொடர் இயற்கைப் பொருளின் தன்மையோடு ஒத்துப்போகிறது. இதனை மேலும் தெளிவுடுத்துவது

'ஆக்கந் தானே காரண முதற்றே' (Senavaraiyanar, 2016)

என்ற தொல்காப்பிய நூற்பாவாகும். செயற்கைப் பொருளின் ஆக்கம் காரணத்தின் வழியாகப் பின்னர் தோன்றும். எனவே காரணமும் ஆக்கமும் தொடர்புடையவையாக அமையும். எடுத்துக்காட்டாக, எண்ணெய் பிழிதல், எருவிடுதல், நீர் பாய்ச்சுதல் போன்ற காரணங்களின் வழியாக மயிர், பயிர் முதலியவற்றில் நன்மை தோன்றினால் அது செயற்கை ஆக்கமாகக் கருதப்படுகிறது. ஆனால் "ஞானமலை ஆவாய்" என்பதில் அத்தகைய காரணத்தால் ஏற்பட்ட புதிய ஆக்கம் சுட்டப்படவில்லை. ஞானம் ஆசிரியரிடம் இயல்பாகவே நிலைபெற்றதாகக் கொள்ளப்படுவதால், இத்தொடர் செயற்கை ஆக்கத்தின் இலக்கணத்திற்குப் பொருந்தாது.

மலை - உருவகம்

மலை என்னும் உருவகத்திற்கான இலக்கண அடிப்படையை உரையாசிரியர் நன்னூல் பொதுப்பாயிரம் 28-ஆம் நூற்பாவின் வழி நிறுவுகிறார்.

'அளக்கலா அளவும் பொருளும் துளக்கலாகா நிலையும்

தோற்றமும் உடையது மலை' (Thirugnanasambandam, 2009).

இந்நூற்பாவால் மலையின் அளவிறந்த தன்மையும் அசையாத் தன்மையும் வரையறுக்கப்படுகிறது. மலைக்குரிய 'துளக்கலாகா நிலை' என்னும் இயல்பை எடுத்துக்கொண்டு, அதனை ஆசிரியரின் ஞானத்தின் நிலைத்தன்மையுடன் உரையாசிரியர் பொருத்துகிறார்.

சைவசித்தாந்த நோக்கில் ஆன்மாவின் ஞானம் ஆணவமலத்தால் மறைக்கப்பட்டும் அலைக்கப்பட்டும் நிற்கும். ஆனால் "ஞானமலை" என்பது அலைவிற்கு உட்படாதது. நிலைத்த ஞான நிலையைக் குறிக்கிறது. எனவே மலையின் நிலைத்தன்மை என்பது அசையாமை, திண்மை, உயர்வு என மூன்று பண்புகளையும் உணர்த்துகிறது. இவை முறையே ஆசிரியருடைய ஞானத்தின் நிலைத்தன்மை, ஆணவத்தால் அலைக்கப்படாமை, உயர்ந்த நிலை ஆகியவற்றுடன் பொருந்துகின்றன. இதேபோல 'கருணைமலை' போன்ற தொடரைச் சுட்டுவதன் வழியாக 'மலை' என்பது ஒரு பண்பின் நிலைத்தன்மையையும் திரட்சியையும் குறிப்பதற்குப் பயன்படும் மரபுத்தொடர் என்பதை உணர்த்துகிறார்.

## முடிவுரை

'ஞானமலையாவாய்' எனும் ஓரு சொற்தொடர், தமிழ் இலக்கண-உரை மரபின் பல அடுக்குகளை ஒருங்கே வெளிப்படுத்துகிறது. சொல் அளவில் வினைமுற்றே ஆயினும் விளிப் பொருள் தந்து நிற்கிறது. முதலாவதாக, 'ஞானமலை' எனும் தொகைச்சொல்லின் தொகைநிலையை பண்புத்தொகை, உவமைத்தொகை என்னும் இரு கோணங்களில் விரித்து, ஒற்றுமைப் பொருள் தரும் பண்புத்தொகையையே உரையாசிரியர் தேர்ந்தெடுக்கிறார். இரண்டாவதாக, 'ஆவாய்' எனும் ஆக்கச்சொல் வடிவம் செயற்கைத் திரிபை அன்றி இயல்பான தன்மையையே உணர்த்துவதை, இலக்கண அடிப்படையில் நிறுவுகிறார். மூன்றாவதாக, இவ்விரு இலக்கண முடிவுகளையும் அடிப்படையாகக் கொண்டு, ஆசிரியரின் ஞானம் காரண காரியத் தொடர்பால் புதிதாக உருவானதன்று, மாறாக இயல்பாகவே நிலைபெற்றது, அசைவற்றது என்னும் சைவசித்தாந்தப் பொருளை உறுதிப்படுத்துகிறார். திருக்குறள் மேற்கோள் தொகைநிலைப் பொருளை நிறுவுகிறது; நன்னூல் மேற்கோள் மலையின் இயல்பைப் விளங்கச் செய்கிறது; திருமுறை மேற்கோள் ஞானத்தின் திரட்சியை நிறுவுகிறது; சைவசித்தாந்தக் கருத்து ஞானமலையின் தத்துவப் பொருளை நிறைவு செய்கிறது. இது, சைவசித்தாந்த உரை மரபில் இலக்கணமும் தத்துவமும் பிரிக்கமுடியாத வகையில் இணைந்திருக்கும் தன்மைக்கு ஒரு குறிப்பிடத்தக்க முன்மாதிரியாக அமைகிறது.

## References


Balasundaram, S. (2012). Tolkappiyam (Vol. 2): Sollathigaram aaraaitchi kaandigaiyurai Periyar University, Salem

Gnanasambandan, A.S. (2016). Adanganmarai Thevaarat Thiruppathigangal, Gangai Puthaga Nilayam, Chennai.

Gopalaiyar, T. V. (2005). Tamizh ilakkana paeragarathi: Sol 3, Tamizhmann Pathippagam, Chennai.

Murugesa Mudaliar, P. S. (1971). Sona saila maalai: Vilakkavurai, Arulmigu Arunachaleswarar Temple.

Senavaraiyanar. (2016). Tolkappiyam: Sollathigaram, Saradha Pathippagam, Chennai.

Thirugnanasambandam, S. (2009). Nannool –Raja Publications, Trichy

Vaiyapuri, R. (2013). Vina venpa: Saivasiddhanta nunporul vilakkam, E-Saivasiddhanta Sabai.

## Conflict of interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


## About the License

© The Author 2026. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License



## Cite this Article

V.S. Sharan Karthick, R. Vaiyapuri's Grammatical Hermeneutics: A Study of Jnanamalaiyavay in Vinavenpa, Indian Journal of Tamil, 7(3), (2026) 42-47. https://doi.org/10.54392/ijot2638